**கவனிக்க.**- 2006.09.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1466 - 2006 ඔක්තෝබර් 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2006.10.05

1466 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 932 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 933 |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 934 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, ஒற்றோபர் 13 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, செத்தெம்பர் 29 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை விற்பனை- 2007

*1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்குப் பின்னைய காலப்பகுதிக்கும் கள்ளுத்தவறணை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் செல்லுபடியாகும் சகல மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் பொது மதுபான வரி நிபந்தனைகளுக்கிணங்க 2007 ஆம் ஆண்டுக்குள் மதுபானம் (கள்ளு) சில்லறைக்கு விற்பனைக்கான வரப்பிரசாதங்களை விலைக்கு வாங்குவதற்காக பேருவளை பிரதேச செயலாளராகிய என்னால் 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. சகல கேள்விப்பத்திரங்களும் நாட்டின் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் பெற்றுக்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டதாக இருப்பதோடு -*

*(அ) கேள்விப்பத்திர வைப்புப் பணமாக எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் கீழ் காணும் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளவாறு கேள்விப்பத்திர பணமாக வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரசீதையும் (ரிசிட்) ;*

*(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணி பூமி ஆகிய நிரந்தர சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரதாரரின் வருமானம் பற்றிய சான்றிதழ்களையும் முன்வைக்க வேண்டும்.*

*கேள்விப்பத்திரமும் வருமானச் சான்றிதழும் முன்வைப்பது சம்பந்தமாக மேற்குறிக்கப்பட்ட மதுபான விற்பனைக்கான நிபந்தனைகள் முறையாக பேணப்பட வேண்டுமென்பதை கேள்விப்பத்திரதாரர்களுக்கு ஆணித்தரமாக வலியுறுத்தப்படுகிறது. கேள்விப்பத்திரம் பூர்த்திசெய்யப்படும்போது கேள்விப்பத்திரதாரர் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும் ;*

(i) *கேள்விப்பத்திரம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும்போது அதிலே குறிக்கப்பட்டுள்ள பணத்தினை இலக்கத்தில் மட்டுமல்லாது எழுத்திலும் குறிக்கப்படல் வேண்டும்.*

(ii) *பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களில் குறிக்கப்பட்ட சாட்சியாளரின் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

(iii) *கோடிட்டு வெட்டப்பட்டுச் செய்யப்படும் சகல திருத்தங்களும் கேள்விப்பத்திரதாரரின் குறுகிய கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.*

*மேற்குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு பூர்த்தி செய்யப்படாத கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.*

*3. முறையாகப் பூரத்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரம் -*

*(அ) கேள்விப்பத்திர வைப்புப் பணமாகச் செலுத்தி பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட ரசீதுடனும் ;*

*(ஆ) வருமானச் சான்றிதழோடும்*

*முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையின் இடதுபக்க மூலையில் "மதுபான விற்பனை நிலைய இலக்கமும் பெயரும்" குறிப்பிடப்பட்டு பேருவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் கேள்விப்பத்திரம் கோரும் கடைசி நேரத்திற்கு முன்னதாகவே இடப்பட வேண்டும். அல்லது கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் பேருவளை பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.*

*4. ஒவ்வொரு மதுபான விற்பனை நிலையத்திற்கான கேள்விப்பத்திரம் கோரப்படும் இறுதிநேரம் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந் நேரத்தில் சகல கேள்விப்பத்திரதாரர்களும் பேருவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.*

*5. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பப்பட்ட கேள்விப்பத்திரதாரரை "தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்" எனப் பிரகடனப்படுத்தப்பட்டபின் அத்தினம் பி. ப. 2.30 மணிக்கு முன் பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் ஒரு தொகைப் பணம் முற்பணமாக பேருவைள பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்து மேற்குறிப்பிடப்பட்ட மதுபானம் சேகரித்து விற்பனை செய்வது சம்பந்தமான நிபந்தனைகளுக்கு கைச்சாத்திடல் வேண்டும். இக் கட்டுப் பணமானது பணமாக அல்லது "வங்கியில் செலுத்தப்படுதற்காக" எனக் குறிக்கப்பட்டு காசோலை மூலமாகவோ, இலங்கை வங்கி மூலமாகவோ, மக்கள் வங்கி மூலமோ அல்லது "பாதுகாப்புடைய காசோலை" என்ற பெயரில் செலுத்தப்பட்ட காசோலை மூலமோ அல்லது அவ்வங்கியின் பெயரில் செலுத்தப்பட்ட காசோலையாகவோ இருத்தல் வேண்டும்.*

*6. மேலதிக விபரங்கள் தேவைப்படின் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*யூ. டீ. சி. ஜயலால்,*
*பிரதேச செயலாளர்,*
*பேருவளை.*

*பிரதேச செயலகம்,*
*பேருவளை,*
*2006.09.21*

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | கிராமம் | மதுபான நிலையம் திறக்க வேண்டிய நேரம் | மதுபான நிலையம் மூடப்பட வேண்டிய நேரம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப்பத் திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்தினம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | பேருவளை பிரதேச சபைப் பிரிவு | அளுத்கம உப பிரிவு எல்லைக்குள் | மு. ப. 11.00 முதல் பி.ப. 5.00 மணிவரை | பி.ப. 2.00 முதல் இரவு 8.00 மணிவரை | 2,000 | 2006, ஒற்றோபர் 17 ஆந் திகதி மு.ப.10.30 மணிவரை |

***முக்கிய குறிப்பு***.– 2007 ஆம் வருடத்திற்குள் தற்போது மதுபான நிலையம் அமைந்திருக்கும் இடத்தைப் பெற்றுத் தருவதாக உறுதி செய்யப்படமாட்டாது. புதியதொரு இடத்தில் மதுவிற்பனை நிலையம் திறக்கப்படுமாயின் அது சம்பந்தமாக பேருவளை பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

10–78

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## *(110 ஆவது அத்தியாயமான) நொத்தாரிசு கட்டளைச் சட்டம்*

முதலாவது அட்டவணையின் "ஆ" பிரிவின் 2 ஆவது பிரமாணத்தின் கீழான அறிவித்தல்

நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்குத் தோற்றப் பதிவாளர் நாயகம் அவர்களுக்கு விண்ணப்பிக்கவுள்ளேன் என குமாரசாமி வீதி, பூத்தூர் கிழக்கு, புத்தூர் என்னும் முகவரியில் வதியும் வேலுப்பிள்ள சிவசுப்பிரமணியம் ஆகிய நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

வே. சிவசுப்பிரமணியம்.

2006.09.18.

10–35

## நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுதல்

அம்பாறை மாவட்டம், கரைவாகுப்பற்று, கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் மருதமுனை 3 ஆம் குறிச்சி இல. 328A, மக்காமாடி வீதி, செய்யது முஹம்மது சாலிஹ் மௌலானா செய்யது ஹஸனுல் பாரி மௌலானா ஆகிய நான், (அடையாள அட்டை இல. 433081706 V) நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 107) (தற்போது அத்தியாயம் 110) இன் முதலாவது அட்டவணையின் 'ஆ' பகுதியின் இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக இவ்வருட இறுதியில் நடைபெறவிருக்கும் நொத்தாரிசு இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற் காகவும் அதன் பலனாக மட்டக்களப்பு நீதி, நிருவாக வலய அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மொழிமூலம் பிரசித்த நொத்தாரிசாக தெரிவாவதற்கு பதிவாளர் நாயகத்துக்கு விண்ணப்பம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

எஸ். எம். எஸ். எச். பாரி மௌலானா.

328A, மக்காமாடி வீதி,
மருதமுனை 3,
2006.09.20.

10–49

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

வாத்துவ, சென்றப்பெட்ரிக் மாவத்தையில் தற்பொழுது வசிக்கும் பெணரகம விதானெலாகே நிமல் ஆகிய நான், இல. 234/5 மல்வத்த வீதியில் உக்கல்படவில் வசிக்கும் சுனில் பெனரகம என்பவரை எனது அட்டோர்ணி தத்துவதாரராக நியமித்து களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற சட்டத்தரணி எம். ஐ. எம். முஸ்னி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 1308 கொண்ட அத்துடன் 1995.02.22 ஆந் திகதியிடப்பட்ட அட்டோர்ணி பத்திரம் செல்லுபடியற்ற தாக்கப்படுகின்றது. என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன். மேலும் அவரால் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ள்றேன்.

பி. வி. நிமல்,
மொல்லிகொட, வாத்துவ.

10– 83

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

மேற்பார்த்து c/o புட்டன் ஸ்ரெயின் பார்ட்டி மொஞ்சரன், 4336 அக்ஸ் மிடில் பேர்க், நெதர்லாந்திலும் இல. 54, சித்ராலேன், கொழும்பு 5 ஐ சேர்ந்த ருக்ஷனா விசித்ரா முனசிங்க ஆகிய நான், என்னுடைய இல. 54, சித்ராலேன் கொழும்பு 5 ஐச் சேர்ந்த டனிஸ்டர் செனரத் முனசிங்கவிற்கு அவரை அட்டோனித் தத்துவக்காரராக நியமித்த அந்த காசையும் 3219 ஆம் இலக்க அட்டோனித்தத்துவப்பத்திர இல. 256 பக்கம் 176 இல் கொழும்பு பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான அட்டோர்ணித் தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்து மீளப் பெறுகிறேன், என்றும் அது செல்லுபடியற்றது என்றும் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் அறியத்தருகிறேன்.

ருக்ஷனா விசித்ரா முனசிங்க.

10–134

# ஏல விற்பனைகள்

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை செய்தல் தொடர்பான அறிவித்தல்*

### சொத்து, நிலமனை ஏல விற்பனை

தொடர்பு இல. : கடன்/2135/2003

(இலக்கம் 200/5ஏ, உடபேராதனை, பேராதனை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ஆனந்த பண்டார தென்னக்கோன், திருமதி தென்னக்கோன் முதியன்சேலாகே தமயந்தி தென்னக்கோன் என்பவர்களினால் ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2004.10.29 ஆந் திகதிய 1,365 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2004.10.18 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "டெய்லி நியூஸ்" ஆகிய புதினப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கிணங்க நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாகவுள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடக்கூடிய பணங்களையும் அறவிடும் பொருட்டு இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தும் நிலமனையும் இலக்கம் 24, ரொறிங்ரன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் 2006.11.08 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர, கங்கவட்ட கோறளை, உட பேராதனையில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜி. ஹீன்கெந்த அவர்களால் தயாரிக்கப்பட்ட 1986.09.12 ஆந் திகதிய 580 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 சி எனக் காட்டப்பட்டுள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. ஆர். டபிள்யு. எம். வீரக்கோன் அவர்களால் 2003, யூலை 10 ஆந் திகதி உட்பிரிவு செய்யப்பட்ட, "அமுனேவெல வத்த" என்றழைக்கப்படும் காணியின் பாகமொன்றாகிய வடக்கில் : மேற்கூறிய 580 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 1 ஏ உம் ; கிழக்கில் : மேற்கூறிய வரைபடத்தின் துண்டு 1 F உம் றோட்டிற்கான பிரவேச மாரக்கமும் ; தெற்கில் : அத்தநாயக்கவின் காணியும் ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட காணியின் துண்டு 1 B உம் எல்லைகளாகக் கொண்ட பதினேழு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 17பே.) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணித் துண்டு முழுவதும் அதற்குள் அமைந்துள்ள கட்டடங்களும் மற்றும் அனைத்துமாகும். இது கண்டி காணிப்பதிவகத்தில் ஏ 346/53 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. ஈ. எம். யு. பண்டார,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
கண்டி.

10-115

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

### சொத்து, நிலமனை ஏல விற்பனை

(திருவாளர்கள் எம். ஏ. ஜே. டயஸ் உம் எம். ஏ. டி. டயஸ் இன் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைத்த ஆதனங்கள்)

இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2004.08.06 ஆந் திகதி 1353 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2004.07.29 ஆந் திகதி "தினமின", "டெய்லிநியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 9, அசோகா கார்டின்ஸ், பம்பலப்பிட்டி, கொழும்பு 04 என்னும் முகவரியைச் சேர்ந்த ஆர். எஸ். எம். ஏலதாரர் 2006.10.28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் (தற்சமயம் கம்பஹா) வத்தளை மாபோல பட்டினசபை எல்லைகளுள் (பிரதேச சபை) வத்தளையில் அமைந்த அம்பகஹகும்புர என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். ஜி. ரணசிங்ஹ

தயாரித்த 2000, ஜனவரி 9 திகதியிட்ட வரைபடம் இல. 857 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட காணித்துண்டு வடக்கில் ஸ்ரீ விக்ரம மாவத்தை வரிமதிப்பிலக்கம் 63, 61, 59 மற்றும் 53/3 ஐக் கொண்ட நிலமனையும், இக் காணியின் துண்டு 3 ம் ; கிழக்கில் : ஸ்ரீ விக்ரம மாவத்தை வரிமதிப்பிலக்கம் 43 ஐக் கொண்ட நிலமனையும் இக்காணியின் துண்டு 2 ம் ; தெற்கில் : இக்காணியின் துண்டு 2 ம் சென் மேரீஸ் றோட் வரிமதிப்பிலக்கம் 23, 21/1, 21 மற்றும் 19/1 ஐக் கொண்ட நிலமனைகளும், மேற்கில் சென் மேரீஸ் றோட் வரிமதிப்பிலக்கம் 21/1, 21, 19/1 மற்றும் 17 ஐக் கொண்ட நிலமனைகளும் ஸ்ரீ விக்ரம மாவத்தை வரிமதிப்பிலக்கம் 63 உம் 61 ஐக் கொண்ட நிலமனைகளும் எல்லைகளாகக் கொண்டு மூன்று றூட் இரண்டு தசம் ஐந்து சைபர் பேர்ச்சுகள் (0ஏ.3றூ.02.50பே.) விஸ்தீரணமுடையது. இது கொழும்பு காணிப்பதிவகத்தில் பீ 721/116 இல் பதிவுசெய்யப்பட்டது.

அத்துடன் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டி. ஜே. வி. பெரேரா தயாரித்த 1981, நவெம்பர் 18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 6304 இல் விபரித்த துண்டு வை (வண்டில் பாதை) மீதான வழி உரிமையும் ஆகும்.

இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை கட்டளைப்படி,

எம். ஏ. ஜி. கருணாரட்ன,
சிரேஷ்ட முகாமையாளர்
(அறவிடல்கள் - கிளை)

இலங்கை வங்கி
(அறவிடல்கள் - கிளை),
இல. 4, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு 01.

10-114

---

## வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி– அம்பலாந்தோட்டை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், கிழக்கு கிருவாபற்று, புஞ்சிஹேனயாகமவில் அமைந்துள்ளதும் "இங்கினியன்கஹவத்த" என்ற "புஞ்சிஹேனயாகமவில" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. எம். என். நவரட்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1974.09.18 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2412/1/2 இல் துண்டு 02 என குறிப்பிடப்பட்டுள்ளதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றினதும் சேர்த்து ஏலவிற்பனை**

காணியின் விஸ்தீரணம் : 3 ஏக்கர்

*(ஹம்பாந்தோட்டையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். கே. எம். மஹரூம் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1999.05.03 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 2929 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவரான துப்பயிகே சந்திரசேன அவர்களால் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்)*

வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2006, ஒற்றோபர் 25 ஆந் திகதி புதன்கிழமை, மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2002.02.08 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2002, யூன் 19, 20 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினகரன்" மற்றும் "திவயின" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம் :**

(1) ஏல முடிவில் கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;

(2) விற்பனைத் திகதியிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ;

(3) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;

(4) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(5) மொத்த விளம்பரச் செலவுகள் ;

(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;

(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 2,500.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி, பிரதம முகாமையாளர்-கடன் மேற்பார்வை மற்றும் (அறவீடுகள்)" இடமிருந்து பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2661815, 2661816.

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும் தரகரும்,
நிபுணத்துவம்பெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுநரும் ஆதன முகவரும்.

381 1/1, காலி வீதி,
கொழும்பு 4.

தொலைபேசி இல. : 2591167
தொலைபேசி/தொலைநகல் இல. : 2584874, 2500838
துரித அழைப்பு : 077-2250422

10-125

## வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி - நொச்சியாகம கிளை

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்*

### ஆதனம் ஏல விற்பனை

மாத்தறை பிரசித்த நொத்தாரிசு எஸ். பி. ஸெனரத் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியின் பெயருக்கு எழுதப்பட்டதாகவும் 2002.11.08 ஆந் திகதிய 3138 ஆம் இலக்க முறியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் விதானராளலாகே இஸ்கோல வத்த கெதர ரொஹான் ரனதுங்க, சுமித்ரா அந்திரிக்கு ஜயரத்ன, விதானராளலாகே லயனல் குணதிலக கடனாளர்களாகவும் விதானராளலாகே இஸ்கோலவத்தே கெதர ரொஹான் இடுவைத்தவராகவும் கடனாளராகவும் தவறியுள்ளா ராதலால் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியால் என் மீது வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்துக்கு அமைய கிடைக்க வேண்டிய கடன் பணத் தொகையையும் ஏலவிற்பனை செலவுகளும் உட்பட எல்லாப் பணத்தையும் பெற்றுக் கொள்வதற்காக கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்தை 2006.10.26 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

### அட்டவணை

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில் வெலிகம கோறளைக்குள் கறந்துவ என்னும் இடத்தில் அமைந்துள்ளதும் மஹதின்னவத்த என அழைக்கப்படுவதுமான காணியின் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எச். ஜே. சமரபால என்பவரால் தயாரிக்கப்பட்ட 20.01.2002 ஆந் திகதிய 1622 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான அவ்வரையறுக்கப்பட்ட காணித்துண்டும் கட்டிடங்களும் மற்றும் அனைத்தும் காணியின் விஸ்தீரணம் 1 றூட் (போகஸ்வத்த கடை அருகில் உள்ள சுமித்திரா எஸவன வீடும் கடையரையுமாகும்)

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2006.03.10 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006.03.22 ஆந் திகதிய “ஜலண்ட்”, “திவயின”, “தினகரன்” ஆகிய பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலவிற்பனை இறுதியில் வெற்றி பெற்ற கொள்வனவாளரால் கீழ்க்காணும் கட்டளைகளில் செலுத்தப் படல் வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 10% ;

(2) உள்ளூர் ஆட்சிக்கான விற்பனை வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணமாக கொள்வனவு விலையில் 2 1/2%;

(4) விற்பனைப் பத்திரத்தைத் தயாரிப்பதற்கான நொத்தாரிசுக் கட்டணம் 2000 ரூபா ;

(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ரூபா உட்பட எல்லா விளம்பரச் செலவுகளும் ஆகும்.

கொள்முதல் விலையில் 90% விற்பனை செய்யப்படும் திகதியில் இருந்து 30 நாட்களுகளுக்குள் டீ. பி. ஜாயா மாத்தை, இல. 479, வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி, பிரதம முகாமையாளர் சட்ட சம்பந்தமானது (அறவீடுகள்) இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. 2661815, 2661819

சொல்லப்பட்ட தொகை 30 நாட்களுக்குள் செலுத்தப்படா விட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையில் 10% தண்டப்பணமாக அறவிடவும் மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆதனங்களையும் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கிக்கான கிளையால் தொலைபேசி இலக்கம் 091-2232248 அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பிரதான அலவலகத்தில் சட்ட சம்பந்தமான அதிகாரியிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

என் எச். பீ. எப். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும்
ஏலதார மதிப்பீட்டாளரும்.

இல. 14, சிறி தர்மராம மாவத்தை,
கோட்டை,
மாத்தறை.

தொலைபேசி 041-2223847 அல்லது 2231263

10-136

---

## செலான் வங்கி லிமிட்டெட் - கிராண்ட்பாஸ் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (நீர்கொழும்பு பதிவகப் பிரிவுக்குட்பட்ட) அளுத்குறு கோறலே தூனகஹா பற்று இந்துரு அகார கிராமத்தில் அமைந்துள்ள நுககஹா கணத்த மற்றும் மில்லகஹாவத்த தற்பொழுது "தூனகஹா செவன" என்றழைக்கப்படுகின்ற அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டப்ளியு. எஸ். எஸ். பெரேராவினால் அளந்து எல்லைகள் வரையறுக்கப்பட்ட வரைவு இல. 2898 மற்றும் 1995, ஓகத்து 11 ஆந் திகதி கொண்ட துண்டு இல. 114 அடையாளமிடப்பட்ட பெறுமதிவாய்ந்த பதினேழு தசம் ஐந்து (0ஏ. 0றூ. 17.5பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் அதில் உள்ள மரம் செடி, கொடிகள் அடங்கலாக அங்கே உள்ள அனைத்தும் மேற்படி வரைவு இல. 2898 மற்றும் ஆவனம் E 818/94 இன் கீழ் நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**காணியைச் சென்றடைவதற்கான பாதையையும் மற்றும் அதனுடன் தொடர்புடைய கீழ் குறிப்பிடப்படுபவற்றையும் பயன்படுத்து வதற்குமான உரிமைகளும் அடங்கலாக :-**

**1. இந்துரு அகார எனும் கிராமத்தில் உள்ள தூனகஹா செவன அல்லது நுககஹா கணத்த மற்றும் மில்லகஹாவத்தை என்றழைக்கப்படும் வரைவு இல. 2898 இன் பிரகாரம் அளந்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணிக்கான (பாதைக்காக**

***ஒதுக்கப்பட்டுள்ள) துண்டு இல. 163 காணி முப்பத்தி மூன்று தசம் இரண்டு பூஜியம் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 33.20பே.) அல்லது 0.08397 ஹெக்டயார் குறித்த வரைவு இல. 2898 இன்படி ஆவணம் E 755/ 199 இன் கீழ் நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காணி.***

***2. இந்துரு அகார எனும் கிராமத்தில் உள்ள தூனகஹா செவன அல்லது நுககஹா கணத்த மற்றும் மில்லகஹாவத்த என்றழைக்கப்படுகின்ற வரைவு இல. 2898 இன் பிரகாரம் அளந்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணி (பாதைக்காக ஒதுக்கப் பட்டுள்ள) துண்டு இல. 145 காணி ஒரு றூட் பத்து தசம் ஒன்பது பூஜியம் பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 10.90பே.) அல்லது 0.12874 ஹெக்டயார் குறித்த வரைவு இல. 2989 இன்படி ஆவணம் E 756/ 207 இன் கீழ் நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காணி.***

***3. இந்துரு அகார எனும் கிராமத்தில் உள்ள துனகஹா செவன அல்லது நுணகஹா கணத்த மற்றும் மில்லகஹாவத்த என்றழைக்கப்படும் வரைவு இல. 2898 இன் பிரகாரம் அளந்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணி (பாதைக்காக ஒதுக்கப் பட்டுள்ள) துண்டு இல. 87 காணி ஒரு றூட் முப்பத்திமூன்று தசம் ஐந்து ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 33.55பே.) அல்லது 0.18603 ஹெக்டயார் பரப்பளவு கொண்டது. குறித்த வரைவு இல. 2898 இன்படி ஆவணம் E 751/ 268 இன் கீழ் நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காணி.***

***4. இந்துரு அகார எனும் கிராமத்தில் உள்ள தூனகஹா செவன அல்லது துணகஹா கணத்த மற்றும் மில்லகஹாவத்தை என்றழைக்கப்படுகின்ற வரைவு இல. 2898 இன் பிரகாரம் அளந்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணி (பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ள) துண்டு இல. 20 காணி இருபத்திரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 22பே.) அல்லது 0.05565 ஹெக்டயார் பரப்பளவு கொண்டது. குறித்த வரைவு இல. 2898 இன்படி ஆவணம் E 765/ 218 இன் கீழ் நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காணி (தற்பொழுது E 860/ 113 ஆக மாற்றப்பட்டுள்ளது)***

**ஏல விற்பனை**

*கடன்பட்டார் என்ற வகையில் வத்தளையைச் சேர்ந்த இதிரீஸ் ஆலிப் புகாரி ஸலாமா ஜுன்கீர் என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்கு செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட காணி.*

மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியை நான் 2006, ஒற்றோபர் 26 ஆந் திகதி மு. ப. 11. மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2006.07.14 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2006.07.06 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப", "வீரகேசரி" ஆகிய நாளிதழ்களையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடைகின்ற வழி.**- மினுவங்கொடையிலிருந்து குருணாகல் வீதியூடாக சுமார் 2.25 கி. மீ. சென்று நில்பனாகொட சந்தியில் தூனகஹா வீதிக்குத் திரும்பி சுமார் 5.5 கி. மீ. சென்று தூனகஹா சந்தியில் இடதுபக்கம் நிர்கொழும்பு வீதியில் சுமார் 150 மீற்றர் மற்றும் 12 ஆம் கி. மீ. இருந்து சுமார் 25 மீற்றர் சென்று வலது பக்கமாக இந்துறு அகார வீதியில் சுமார் 350 மீற்றர் சென்று முச்சந்தியில் வலது பக்கமாக தூனகஹா செவன வீதியில் மேலும் 450 மீற்றர் வரை சென்று குறித்த சொத்தை சென்றடையலாம். இது கொழும்பிலிருந்து சுமார் 41 கி. மீ. தொலைவில் உள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாக செலுத்தல் வேண்டும் :-

கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்தவேண்டிய ஒரு விதம் (1%) ; ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%) ; விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2000 ரூபா ; இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி 500 ரூபா ; விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) இடமிருந்து பெற்றுக் கொள்ளவும் முடியும். தொலைபேசி : 011-2456285, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (ச. நீ.)
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளரும்
மதிப்பீட்டாளரும்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ,

தொலைபேசி 2696155, 2572940

10-123

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.**

### அட்டவணை-2006

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வியாழன் | 05.10.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.09.2006 |
| | | வெள்ளி | 13.10.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.09.2006 |
| | | வெள்ளி | 20.10.2006 | .. | நண்பகல் 12 | வியாழன் | 05.10.2006 |
| | | வெள்ளி | 27.10.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.10.2006 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 03.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.10.2006 |
| | | வெள்ளி | 10.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.10.2006 |
| | | வெள்ளி | 17.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.11.2006 |
| | | வெள்ளி | 24.11.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.11.2006 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 01.12.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.11.2006 |
| | | வெள்ளி | 08.12.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.11.2006 |
| | | வெள்ளி | 15.12.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.12.2006 |
| | | வெள்ளி | 22.12.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.12.2006 |
| | | வெள்ளி | 29.12.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.12.2006 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006, சனவரி 01.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.